69

## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி துறை – பட்டயக் கல்வியை முடித்து, அக்டோபர் 2019–ல் கூடுதல் தேர்வு எழுத வாய்ப்பு முடிந்த பட்டயப் படிப்பில் நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள முன்னாள் மாணாக்கர்களுக்கு கருணை அடிப்படையில் (Special Grace Chance) தேர்வு எழுத மற்றும் ஏப்ரல் 2020 தேர்வுக்கான தேர்வு கட்டணம் செலுத்த தவறிய மாணாக்கர்களுக்கு ஒருமுறை மட்டும் எதிர்வரும் வாரியத் தேர்வின் போது தேர்வு எழுத சிறப்பு அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (பி1) துறை**

**அரசாணை (நிலை) எண். 165** **நாள்: 17.11.2020**

சார்வரி வருடம், கார்த்திகை 02,
திருவள்ளுவர் ஆண்டு 2051.
படிக்கப்பட்டது :

1. அரசாணை (டி) எண்.153, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 12.06.2019.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவரின் கடிதம் எண்.108069/எம்1/2020, நாள் 23.10.2020.

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பல்வேறு பாடத்திட்டத்தில் பட்டயக்கல்வியை முடித்து, நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள முன்னாள் மாணாக்கர்களுக்கு அக்டோபர் 2019 மற்றும் ஏப்ரல் 2020 வாரியத் தேர்வுகளின்போது சிறப்பு கருணை அடிப்படையில் தேர்வு எழுத அரசின் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர், ஏப்ரல் 2020 வாரியத்தேர்வுக்கான கட்டணம் தட்களுடன் (Thakkal) செலுத்தும் இறுதி நாள் 09.03.2020 என்றும், கோவிட்–19 நோய் தொற்று காரணமாக மாணாக்கர்கள் கல்லூரிக்கு வர இயலாத சூழ்நிலையினால் மேற்குறிப்பிட்ட தேதிக்குள் தேர்வுக்கட்டணம் செலுத்த சில மாணாக்கர்கள் தவறவிட்டனர் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, சிறப்பு அனுமதியாக அக்டோபர் 2019–ல் கூடுதல் தேர்வு எழுத வாய்ப்பு முடிந்த பட்டயப் படிப்பில் நிலுவை பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள மாணாக்கர்களுக்கு கருணை அடிப்படையில் (Special Grace Chance) தேர்வு எழுத அனுமதி வழங்குமாறும் மற்றும் ஏப்ரல் 2020 தேர்வுக்கான தேர்வு கட்டணம் செலுத்த தவறிய மாணாக்கர்களுக்கு ஒருமுறை மட்டும் எதிர்வரும் வாரியத் தேர்வின்போது தேர்வு எழுத சிறப்பு அனுமதி அளிக்குமாறும் தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவரின் மேற்காணும் கருத்துருவானது அரசால் பரிசீலிக்கப்பட்டது. மாணாக்கர்களின் நலன் கருதி, பட்டயக்

....2

கல்வியை முடித்து, அக்டோபர் 2019–ல் கூடுதல் தேர்வு எழுத வாய்ப்பு முடிந்த பட்டயப் படிப்பில் நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள முன்னாள் மாணாக்கர்களுக்கு கருணை அடிப்படையில் (Special Grace Chance) தேர்வு எழுத அனுமதி மற்றும் ஏப்ரல் 2020 தேர்வுக்கான தேர்வு கட்டணம் செலுத்த தவறிய மாணாக்கர்களுக்கு ஒருமுறை மட்டும் எதிர்வரும் வாரியத் தேர்வின் போது தேர்வு எழுத சிறப்பு அனுமதியும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25.
நகல்:
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
உயர்கல்வித் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9
இ.கோ/உதிரி.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

17.11.2020

பிரிவு அலுவலர்

17/11/20